விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 20 ஜுல்கஜ் 8 இதழ் 203
யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-9-84

## ★ கண்டியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து 69 குண்டுகளை பொலிஸார் கைப்பற்றினர்; இருவர் கைது

(கண்டி)

கண்டியிலுள்ள ஒரு வீட்டிலிருந்து அறுபத்து ஒன்பது குண்டுகள் பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இது சம்பந்தமாக கண்டிப் பொலிஸார் இருவரை கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கண்டித் தொகுதியிலுள்ள பாத்ததும்புர எனும் கிராமத்திலுள்ள ஒரு வீட்டை பொலிஸார் சோதனையிட்ட போதே மேற்படிக் குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

இதே கிராமத்தில் மற்றுமொரு வீட்டை பொலிஸார் சோதனையிட்டபோது ஐந்து துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

## ரூ 50,000 கொள்ளை

(கரவெட்டி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை நெல்லியடி உப அலுவலகத்திலும் இளைஞர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நேற்றுப்பகல் நெல்லியடி

[8-ம் பக்கம் பார்க்க]

# "சதி முயற்சி மேற்கொள்ள டக்ளஸ் திட்டமிட்டிருந்தார்!"

## பாராளுமன்றத்தில் அநுரா குற்றச்சாட்டு

(இ. கந்தசாமி)

**"சட்டபூர்வமாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமொன்றை 1962ம் ஆண்டில் கவிழ்ப்பதற்குச் சதி செய்தவர்களில் முக்கியமானவர் திரு. டக்ளஸ்லியனகே. அப்படிப்பட்ட ஒருவரை அரசாங்கம், தகுதிவாய்ந்த அதிகாரியாகவும், ராஜாங்கஅமைச்சின் செயலாளராகவும் நியமித்தது ஏன் என்பது தெரியவில்லை. அவர் அன்று மேற்கொண்ட சதியையே மீண்டும் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்" என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா நேற்றுப் பாராளுமன்றில் குற்றம் சுமத்தினர்!**

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் கூடியபோது, திரு. டக்ளஸ்லியனகே விவகாரம் முக்கிய இடத்தைப்பெற்றுக் கொண்டது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுராபண்டாரநாயக்கா இதுசம்பந்தமாக மேலும் கூறியதாவது:

"திரு. டக்ளஸ் லியனகே ஜெருசலத்தில் தெரிவித்த கருத்துக்கள் மிகப்பாரதூரமானவை. தற்போதைய அரசாங்கத்துக்கும், எதிர்கால அரசாங்கங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை.

"அரசாங்க அதிகாரியான அவர் நாட்டுக்கும், அரசுக்கும் ஏற்படுத்தியுள்ள அபகீர்த்தி தொடர்பாக அரசாங்கம் அவர் மீது எடுக்கவுள்ள நடவடிக்கைகளை அரசாங்க அதிகாரிகளும், அரபுநாடுகளும் ஆர்வத்துடன் எதிர்பார்த்

[8-ம் பக்கம் பார்க்க]

## டக்ளஸ் ராஜினமா!

[கொழும்பு]

ராஜங்க அமைச்சின் செயலாளரும் பிரதம பத்திரிகைத் தணிக்கை அதிகாரியுமான திரு. டக்ளஸ் லியனகே தமது பதவியை ராஜினமா செய்துள்ளார்.

அண்மையில் தனிப்பட்ட முறையில் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்ததிரு லியனகே, இஸ்ரேலுக்கும் விஜயம் செய்து பிரச்சினைக்குரிய சில விடயங்களை பத்திரிகைகளில் வெளியிட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் திடீர் பரபரப்பு!

(கரவெட்டி, மாவிட்டபுரம் நிருபர்கள்)

ஜீப்வண்டியொன்றை சில இளைஞர்கள் கடத்த முயன்று தோல்வியடைந்ததை யடுத்து அவ்விடத்திற்கு இராணுவம் வந்ததால் நெல்லியடிப் பகுதியில் நேற்று சிலமணிநேரம் பெரும்பரபரப்பு ஏற்பட்டது! கடைகள் பூட்டப்பட்டு மக்கள் நடமாட்டமின்றி வீதி வெறிச்சோடியது.

நெல்லியடி பருத்தித்துறை வீதியில் வைத்து சில இளைஞர்கள் நேற்றுக்காலை எட்டு மணியளவில் மின்சார சபைக்குச்சொந்தமான ஜீப்வண்டியொன்றைக்கைப்பற்றி கடத்திச் செல்ல முயன்றபோது

(8-ம் பக்கம் பார்க்க)

## வகுப்புகளைநடத்தவசதியில்லை திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்

### 'ஹாட்லி' நிலைமை குறித்து யாழ். அரச அதிபர் தகவல்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை நகரில் 41 கடைகள் முற்றாக எரிந்து விட்டன 5 கடைகளில் ஒரு பகுதி தீக்கிரையாகியுள்ளன. 6 வீடுகளும் தியேட்டரின் ஒரு பகுதியும் இரண்டு அச்சகங்களும், ஒருகைத்தொழில்நிறுவனமும், ஒருவானும், வ. போ. ச. நேர அறிவிப்பாளர் காரியாலயமும் தீக்கிரையாகியுள்ளன.

பருத்தித்துறைக்கு நேற்று முன்தினம், யாழ் பதில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நேரில் சென்று பார்த்த போது, மேற்கண்ட தகவல் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க அதிபருடன் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், திரு. குலநாயகம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

ஹாட்லி கல்லூரி அதிபரை

(8 ம் பக்கம் பார்க்க)

## தலையில் சுடப்பட்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் இராணுவ முகாமுக்கு உணவு விநியோகம் செய்துவந்தவர் என்று கூறப்படும் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளத்தைச் சேர்ந்த சில்வா என்ற இந்நபர் தலையில் சுடப்பட்டு மரணமாகியுள்ளார்.



## குதூகலத் திறப்பு விழா

வடமாகாணத்தின்
நங்கையர் நலன் பேண
ஆபரண அலங்காரத்தில்
புதிய
தொழில் நுட்பங்களுடன்

**நாளை 6 9 1984
வியாழக்கிழமை
காலை 7–10 மணி
தொடக்கம் 8–30 மணி
வரையிலான
சுபமுகூர்த்தத்தில்**



**யாழ். நகரில்**

### நியு லக்கி ஸ்டார் ஜுவல்லறி

எனும் ஸ்தாபனம் திறக்கப்படுகிறது

யாழ். ஜெயலட்சுமி கம்பனி உரிமையாளர்
திரு. பே சிவசுப்பிரமணியம் அவர்கள்
இதனைத் திறந்து வைப்பார்.

வைபவத்தில் அனைவரையும் பங்குபற்றுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**நியு லக்கி ஸ்டார் ஜுவல்லறி**
229A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

1551

## ஹாட்லிக்கல்லூரி நூலகத்தில் 7,500 நூல்கள் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

**பருத்தித்துறையில் இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து ஹாட்லிக்கல்லூரி நூலகத்தில் சுமார் பத்துலட்சம் ரூபா பெறுமதியான கிடைத்ததற்கரிய 7,500 நூல்கள் தீக்கிரையாகிவிட்டதாக உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.**

பருத்தித்துறையில் பாதிக்கப்பட்ட இடங்களை தமிழர் விடுதலைக் கூட்டணிசெயலாளர் நாயகம் திரு அ அமிர்தலிங்கம் நேற்றுப்பார்வையிட்டார். ஹாட்லிக்கல்லூரியில் தீவைக்கப்பட்ட பகுதிகளை

[8-ம் பக்கம் பார்க்க]

## மாணவர் பகிஷ்கரிப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் சிலர் தாக்குதலுக்குள்ளானதைத் தொடர்ந்து காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த கல்லூரிகள் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டன.

கல்லூரிக்கு அண்மையில்

[8 ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் சந்தைக்கு அருகாமையில் ½ பரப்புக்காணி (இரு குழாய்க் கிணறுகளுடன்) பகல் 12 மணிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும். 966, பருத்தித் துறைவீதி, நல்லூர். 1531

நாஷனல் T. C. 294 NSPA '20' T. V. (Remote Control) விற்பனைக்குண்டு. விலை: 14,000/- 3, ரெம்பிள் ரோட், முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1606

8 Sriமொறிஸ்மைனர் சொந்தப்பாவிப்பில் உள்ளது. U.K. யில் பாவிக்கப்பட்டது. 2வது உரிமையாளர். நல்ல நிலைமையில் உள்ளது. ரூபா 55,000/- அல்லது கிட்டிய விலை. M.O. ஸன்ஸ், 79, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 1605

நல்ல இன அல்சேசன் 5 கிழமைக் குட்டிகள் ஒரு சோடி விற்பனைக்குண்டு. தொடர்பு: குமாரசாமி, 179/2, கோவில் வீதி, (வடக்குத் தொங்கல்), நல்லூர். 1604

வீட்டுடன் ரியூட்டறிக் கட்டிடம் அமைந்துள்ள 3 பரப்புக் காணி. சித்தன்கேணி, பண்டத்தரிப்புக்குஇடையில், பாடசாலை, போஸ்ட் ஆபிஸ்அருகில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு திரு. ஜெயரெட்ணம்,சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு. 1611

Honda M. B. 100 86 சிறீ 6983 இலக்க மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: இன்ரநெஷனல் ரேடிங் கொம்பனி, கண்டி வீதி கிளிநொச்சி. 1612

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்கு தேவை. விபரங்களை எழுதவும், விளம்பரதாரர், 59, Oldpark Road, Jaffna 1608

அப்பள வேலையில் நன்கு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. நாளுக்கு 20 முதல் 25வரை சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். S. செல்வராணி புலவனூர்வீதி, கல்வியங்காடு. 1593

தெல்லிப்பளையில் அமைந்துள்ள மின் மோட்டார் தொழிற்சாலைக்கு 45வயதிற்கு மேற்பட்ட எழுதுவினைஞர் ஒருவர் உடன் தேவை. தெல்லிப்பளை சுற்றுடலில் வசிப்பவர் விரும்பத்தக்கது. 10-9-84க்கு. முன்விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1596 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 1596

## வாடகைக்கு

பெரிய கடைக்கு அண்மையில், பாதுகாப்பான புதிய பகுதிவீடு, நவீனவசதிகளுடன் சிறு குடும்பத்திற்கு பல்கலைக் கழக மாணவிகளும் தங்க வசதியான . வேறு விசாலமான வீடும் கஸ்தூரியார் வீதியில் உண்டு. வியாபாரிகள்தொழிற் சாலையாகவோஅல்லது ஸ்டோராகவோ (Store) உபயோகிக்கலாம். Phone: 22335. விபரம் 142, ஆஸ்பத்திரி வீதி. 1603

## தவறிவிட்டது

31-8-84இல் யாழ்ப்பாணத்தில் ஜெயராஜன் பரந்தாமன், மணியகாரன் லேன், கொக்குவில் கிழக்கு என்ற விலாசமிடப்பட்ட அடையாளஅட்டை தவறிவிட்டது. கண்டவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். 1614

யாழ்ப்பாணம் கடைவீதியில் நீல துணிப்பையுடன் மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்து இல; 72, முனீஸ்வர வீதி, பலகைக் கடையில் ஒப்படைப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1598

## வகுப்புகள்

A/L 85 தூய பிரயோக கணிதம் பகல்நேர வகுப்புக்கள் 1-10-84இல் ஆரம்பமாகின்றன. பிரிவு: I 8-00: காவிகள் 9-00திரிகோணகணிதம்பிரிவுII 10-30: தொடர்புவேகம்11-30: நுண்கணிதம், ஆசிரியர்: Ravi mohan, 74A, மணிக் கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்திக்கும், பெருமாள் கோவிலுக்கும்இடையில்) 1610

I. C. M. A Section A, B and P.I Lectures on past Papers and Suggested Questions and Answers for Nov Exam Business Law Financial Accounting Economics Analysis Organisation of Production Cost Accounting Lecturers Mr. A.Kailayapillai Mr. S Sivapalan. 11-ம் வகுப்பு மாணவர்களுக்கு விசேட கொம்பியூட்டர் செய்கை முறை வகுப்புகள் பள்ளிக்கூடங்களில் பவிக்கப்படும் Sinclair ZX Spectrum கொம்புயூட்டர்மூலம்10.9.84ல் ஆரம்பிக்கப்படும். Radhakrishnas's Polytechnic, Kailasapillayar Koveladv, 392, Navalar Road, Nallur Jaffna. 1575

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசிங்கம் கைம்பெண் விமலாதேவியின் மரணசாதனமில்லாச் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவம் கோரிச் செய்த மனு சம்பந்தமாக

— மரணமெய்தியவர் பொன்னையா தேவதாசன் சங்குவேலி, — மனுதார் மரணச் சொத்துரிமை நியாயாதிக்கம் இல: T 204

எதிர்

(1) பாலசிங்கம் மகள் தயாநிதி,

(2) பாலசிங்கம் நவநிதி, (பராயமடையாதவர்கள்)

(3) பாலசிங்கம் மகள் சுகந்தினி, (பராயமடையாதவர்கள்)

2-ம், 3-ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்கள் இவர்களின் பாதுகாவலர்.

(4) பொன்னையா கணேசன் எல்லோரும் சங்குவேலி — எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத் தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுஅதில்அதற்கிணங்கப்பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ம் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதுஎன்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1984-ம் ஆண்டு ஆனிமாதம் 11-ம் திகதி,
என்னால் வரையப்பட்டது.

எஸ். இராசேந்திரம்,
மனுதாரின் சட்டத்தரணி
1590

## NEW MASTER INSTITUTE

BMC LANE, JAFFNA.

DAY CLASS 85 A/L

1-ம் பிரிவு

ஆரம்பம் 10-09-84 காலை 7 மணி

உ

## திருமண அழைப்பு

மணமகன்:
செல்வன் இ. சற்குருநாதன் (அப்பு)
(வைத்தியக் கலாநிதி, பத்திரிகை நிருபர்)

மணமகள்:
செல்வி. வே. சிவபாக்கியம்
(ஆசிரியர், மு. ம. வி., நிலாவெளி)

இடம்:
மணமகள் இல்லம்

காலம்:
6-09-1984 வியாழக்கிழமை

நேரம்:
பகல் 11 மணி முதல் 12 மணி வரை

வரவேற்புபசாரம்:
8-9-1984 பி. ப. 4 மணிக்கு மணமகன் இல்லம்

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி
இ. அனுஷம்மா,
(வைத்தியர்)
''மாணிக்க வாசா''
வேலணை.-2

திருமதி
வே. சின்னத்தங்கம்,
வேலணை மேற்கு,
வேலணை.

1615

## "சுகாதார அறிவுரைகள்"

யாழ். மருத்துவ சங்கத்தால் வெளியிடப்பட்ட கை நூல்

நோய்வராமல் தடுத்துவாழும் முறைகள் குறிக்கப்பட்ட நூல்

விலை ரூபா 3–00 தபாற் செலவு சதம் -/60

விரும்பியோர் முக்கியமாக பாடசாலை அதிபர்கள், வைத்தியசாலைகள், தொண்டர் ஸ்தாபனங்கள்

தொடர்பு கொள்ளவும்:-

யாழ். மருத்துவ சங்கம்
அரசினர் வைத்தியசாலை,
யாழ்ப்பாணம் 1613

## வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் ஓர் தொழில் ஸ்தாபனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்கள் தேவை,

I PRODUCTION FOREMAN
- (a) ஆகக்குறைந்தது G. C. E. O/L வரை படித்திருக்கவேண்டும்.
- (b) குறைந்தது ஐந்து வருட WORK SHOP அல்லது INDUSTRIAL அனுபவம் இருத்தல் வேண்டும்.
- (C) வயது 25—35க்குமிடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்-
- (D) SHIFT வேலை செய்யவேண்டும்.

II KNITTING MANAGER
KNITTINGand FNIISHINGல்ஆகக் குறைந்தது பத்துவருடங்கள் அனுபவமுள்ள KNITTING MANAGER தேவை

III BOOK-KEEPER
- (a) I A A அல்லது அதற்குச்சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- (b) ஆகக்குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
- (C) வயது 20—25க்குமிடைப்பட்ட வராயிருத்தல் வேண்டும்.

அனுபவத்திற்கும் திறமைக்குமேற்ப சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 10-9-84

விளம்பர இல. 1508, C/o ஈழநாடு.

(1508)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
9-5-1950

மறைவு:
5-9-1983

வீ. கயிலாயநாதன்

மறைந்தும் மறையாமல் எம் இதயங்களில்
குடிகொண்டிருக்கும் குலவிளக்கே ராசா
நிறைந்த பண்புடைய பாலகனே எம் கண்களிலிருந்து
மறைந்து ஓராண்டு ஆகின்றதே எம் உயிரே
கண் விழித்தால் உம் நினைவே எம்மைக்
கலக்குகின்றதே எம் தலைவா
விண்ணிலிருந்து நாமடையும் துயரம் தனைப்பார்த்து
எப்படித்தான் பொறுத்திருக்கின்றாயோ ராசா
கயிலண்ணை கயிலண்ணை என்று உமை நாடிவரும்
கூட்டத்துடன் சேர்ந்து வீட்டைக்
கலகலக்க வைத்தாயே கண்ணே
துயிலின்றி வாடுகின்றோம் உம்மறைவால் வீடும்
வெறிச்சோடிக் கிடக்குதே எம் உயிரே
பண்டிகை எடுத்து உம்மை மணக்கோலத்தில்
பவனிவரும் நாள்தனை பார்த்திருந்தோம் கண்ணே
தண்டிகை தன்னில்தனும் உம் இறுதி ஊர்வலத்தைக்
காண முடியாத மாபாவிகள் ஆனோமே கண்ணே
கெஞ்சிக் கலங்கினாலும் கனவில் தனும் உன்னைக்
காணமுடியவில்லை கண்ணே
நெஞ்சிருக்கும் வரை உம் நினைவு
எம் இதயங்களிலிருந்து அகலாது கண்ணே
நாள் தோறும் எம் கண்களிலிருந்து வடியும் நீர்
உமது ஆத்மா சாந்தியடைய உதவட்டும் எம் ஆருயிரே

உம் மறைவால் வாடி வதங்கும் உம் குடும்பத்தினர்
''பரிமளபதி'' கோண்டாவில்.

5-9-84. 1609

# இஸ்ரேலில் கூட்டு அரசாங்கம் அமைக்கும் முயற்சி தோல்வி

## லிக்குட் கட்சிபுதிய நிபந்தனை விதித்தது

ரெல்அவிவ், செப். 4

**இஸ்ரேலில் தொழிற் கட்சி, லிக்குட் கட்சி இணைந்த கூட்டு அரசாங்கம் அமைக்கும் முயற்சி கடைசி நேரத்தில் தோல்வியில் முடிந்தது.**

கூட்டு அரசாங்கம் அமைக்கும்முயற்சி. கடந்த சில வாரங்களாக இரு பிரதான கட்சிகளிடையேயும், மற்றும்சிறியகட்சிகளிடையேயும் நடைபெற்று வந்தது. முயற்சி பெருமளவில் வெற்றியளித்து கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட ஒருநிலையில் புதிதாக உருவாகியிருந்த சில முரண்பாடுகளினுல் உ ன் பா டு கைகூடாமல் போய்விட்டது.

சமீரின் லிக்குட்கட்சி பல புதிய நிபந்தனைகளை இறுதி நேரத்தில் முன்வைத்தபோது தொழிற்கட்சித் தலைவர் சீமோன் பெரேசோ அதனை நிராகரித்துவிட்டார்.

பிரதமர் பதவியை யார் முதலில் வகிப்பது, சில முக்கிய மந்திரிகளை பகிர்ந்துகொள்வது தொடர்பாகவே இந்த இழுபறி கடைசி நேரத்தில் தோன்றியது.

நான்கு ஆண்டுகள் பதவிக் காலத்தில் முதல் இரு ஆண்டுகளும் தொழிற்கட்சித் தலைவர் பிரதமராகவும், ஏனைய இரு ஆண்டுகள் லிக்குட் கட்சித் தலைவர் பிரதமராக இருப்பதற்கு முன்னர் இணக்கம் காணப்பட்டது. அத்துடன் பிரதான அமைச்சர்களை சமமானமுறையில் பகிர்ந்துகொள்வதற்கும் இருகட்சிகளும் இணங்கியிருந்தன. பின்னர் லிக்குட் கட் இந்த நிபந்தனைகளை ஏற்காத காரணத்தினுலே கூட்டு அரசாங்க முயற்சி முறிவடைந்ததாக நம்பப்படுகிறது.

இந்த முயற்சி முறிவடைந்ததைத்தொடர்ந்து இஸ்ரேலில் புதிய அரசாங்கமொன்று அமைக்க முடியாத நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

(சூ)

### மினிபஸ் கடத்தல்

(மாவிட்ட புரம்)

பண்டத்தரிப்பில் நேற்று முன்தினம் தனியார் மினி பஸ் ஒன்று இனம்தெரியாத இளைஞர்களினுல் கடத்திச் செல்லப்பட்டது.

இது தொடர்பாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைவிடுதியில் இனம் தெரியாத இளைஞர்கள் சிலர் அங்கிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாகக் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது

### இந்திய விமான கடத்தல்காரர்:

## 21நாள் காவலில்!

சண்டிகார், செப். 4

இந்தியாவின் போயிங் 737 விமானத்தை டுபாய்க்கு கடத்திச் சென்ற 7 பேரும் நேற்று சண்டிகார் துணைநீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களை 21 நாள் காவலில் வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்கள் விசேட விமானமொன்றில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் புதுடில்லியிலிருந்து சண்டிகார் கொண்டு வரப்பட்டார்கள்.

முன்னதாக கடத்தல்காரர்களுக்கு அமெரிக்க அரசாங்கம் பாதுகாப்பு வழங்க முடியாது என்று தெரிவித்ததைத் தொடர்ந்து ஐக்கிய அரபு ராஜ்யங்களின் அரசாங்கம் கடத்தல்காரர்களை இந்தியாவுக்கு அனுப்புவதென்றுமுடிவு செய்தது.

இந்திய அரசாங்கம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்: கடத்தல்காரர்களை இந்தியாவிடம் திருப்பி ஒப்படைப்பதற்கு உதவிகள் புரிந்த ஐக்கிய அரபு ராஜ்யங்களின்அரசு, அமெரிக்க அரசாங்கங்களுக்கு நன்றிதெரிவித்ததோடு கடத்தல்காரர்கள் நியாயமானமுறையில் விசாரணை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

(சூ)

### 'எஸ். டி.' விவகாரம்:

## அ.தி.மு.க. இரு சட்டசபை உறுப்பினர் வெளியேறினர்

(சென்னை,

தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அ.தி.மு.க விலிருந்தும் தமிழக அமைச்சரவையிலிருந்தும் நீக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து அ.தி.மு. கழகத்தைச் சேர்ந்த திரு பி. எஸ்.கந்தசாமி, திரு எம் சுப்பிரமணியம் ஆகிய இரு சட்டமன்ற உறுப்பினர்களும் வெளியேறியுள்ளனர்.

திரு எஸ்.டி.சோமசுந்தரம் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து இரு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு டி.வீராசாமி உணவு விலைக்கட்டுப்பாட்டு அமைச்சராகவும் திரு எஸ்,எஸ்.ஆர் ராமச்சந்திரன் கூட்டுறவு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவரை கூட்டுறவுத்துறை அமைச்சராகவிருந்த திரு திருநாவுக்கரசு வணிகவரி, சுங்கத்துறைஅமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அமைச்சு முன்னர் முதலமைச்சரின் கீழ் இருந்தது.

### அமைச்சரவை நீக்கம்: சோமசுந்தரம் மகிழ்ச்சி

(சென்னை)

தமிழக அமைச்சரவை, அ. தி.மு. கழகம் ஆகியவற்றிலிருந்து தாம் நீக்கப்பட்டது குறித்து திரு எஸ்.டி.சோமசுந்தரம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

தமது எதிர்காலம் குறித்து இன்னும் மூன்று தினங்களில் அறிவிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

சென்னை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில், முன்னர் அறிவித்தது போன்று தமிழக மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்வதற்கு தயாரகவுள்ளேன். எனது எதிர்கால அரசியல் வாழ்வு எனது ஆதரவாளர்களையும் நண்பர்களையும் கலந்தாலோசித்துவிட்டு முடிவு செய்வேன்'' என்று கூறினுர்.

தாம் வைத்திருக்கும் அரசாங்கவாகனத்தை ஒப்படைக்கப் போவதாகவும் குடியிருக்கும் அரசாங்க வீடும் ஒரு மாதத்தில் திருப்பி ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சூ)

# ''உலகில் சிறந்த விமானப்படை இந்தியாவில் தான் இருக்கிறது'

### ஓய்வு பெறும் விமானத் தளபதி பெருமிதம்

திருவனந்தபுரம், செப். 4

''உலகில் தலைசிறந்த விமானப்படை இந்தியாவிடம்தான் இருக்கிறது. நாட்டைப் பாதுகாப்பதற்கு விமானப்படையினர் சிறப்பான சேவையாற்ற வேண்டும்'' என்று விமானப் படைத்தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் ஏயர் டி. மார்ஷல் ஹில்தாசிங் குறிப்பிட்டுள்ளார்.

திருவனந்தபுரம் புதிய விமானப்படைத்தளத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசுகையில் தான் அவர் இதனைத் தெரிவித்தார்.

40 ஆண்டுகள் இந்திய விமானப் படையில் சேவையாற்றிய சீக்கியரான இவர் நேற்று விமானப்படைத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றுர்.

புதிய விமானப்படைத் தளபதியாக இந்துஸ்தான் விமானப்படை நிலையத்தைச்சேர்ந்த எம். எம். கத்தரே பதவி ஏற்றுள்ளார்.

(சூ)




### பருத்தித்துறை சம்பவம்:

## உண்மைநிலையை அரசஅதிபர் நேரில் அறிந்துகொண்டார்

### ஹாட்லிக்கல்லூரியை கல்விப்பணிப்பாளர் பார்வையிட்டார்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களின்போது எரிக்கப்பட்ட, தாக்குதலுக்குள்ளான கடைகள், வீடுகளை யாழ். அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் பார்வையிட்டார்.

திரு பஞ்சலிங்கத்துடன், யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான எஸ்.பி. பாலசிங்கம் மற்றும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரும் சென்றிருந்தனர்.

மேற்படி சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்களையும் அரசாங்க அதிபர் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

### கல்விப் பணிப்பாளர்

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு எம் சிமியாம் பிள்ளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்று அங்கு நாசமாக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

கல்லூரியில் எரிந்த நூலகம் மற்றும பகுதிகளையும் அவர் கவனித்தார்.

[மா]

## மணிவாக்கு

புத்தகங்கள் மனித ஞாபகார்த்தங்கள்; அவனுடைய முன்னேற்ற விருப்பங்கள்; நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உள்ள தொடர்பு; அவன் உபயோகப்படுத்தும் ஆயுதங்கள்.

—ஸ்டீபன்லின் சென்ட் பெனட்.

# நமதுநோக்கு

## எங்களுடைய "டீவர்" யார்?

அரசியல் வியாதி ஏற்படுத்திய ராணுவ ஆட்சி வடபகுதி மக்களை அழிவுக்கு இட்டுச்செல்கிறது.

அதென்ன விதமான வியாதி? எதிர்க்கட்சியிலிருக்கும்போது சொல்வதைப் பதவிக்கு வரும்போது சொல்ல மறுப்பது. அப்படிச் செய்தால் மற்றவர்கள் முடியாதென்று கண்ட ஒன்றை நீ முடிக்கவேண்டி நேரும்; இந்தப் போட்டி வியாதி நாட்டைக் கெடுக்கிறது.

இந்த நிலையில் மக்கள் தம்மைத் தாமே கொன்று ஒழித்துக்கொள்ளும் ஆபத்து உருவாகிறது; அதில் பயிற்சியும் உண்டு

நாட்டின் தமிழ்ப் பகுதிகளில் இதுகாறும் நடைபெற்ற வன்செயல்கள் இன்று இலங்கையின் வடபுறமாகிய பருத்தித்துறையில் இன்னொரு உச்சநிலையை எட்டிவிட்டன.

ஆயுதப்படையினர், 'பயங்கரவாதிகள்' பொதுமக்கள் கொல்லப்பட்டதும், மக்கள் ஆயிரக்கணக்கில் வீடுவாசலை இழந்து அகதிகளானதும், இலங்கையின் பிரபல அரசாங்கக் கல்லூரியாகிய ஹாட்லிக் கல்லூரியின் புதிய கட்டிடங்கள் உட்பட நூல்நிலையம் முற்றாக எரிந்து சாம்பரானதும் இப் 'போரின்' சாதனைகள். ''ஹாட்லி'' என்றால் உலகில் எங்கெங்கெல்லாம் தாக்கம் ஏற்படும்!

இச்சம்பவங்கள் அங்கும் இங்கும் தனிப்பட்டு நடந்தேறினால் மக்கள் பொது வாழ்வு அதிகம் பாதிக்கப்படாது.

இவற்றால் ஏற்பட்ட 'கெடிக்கலக்கம்' யாழ்ப்பாண மக்களின் தினசரி வாழ்வைப் பாழ்படுத்திவிட்டது.

யாழ்ப்பாண வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் பகிஷ்கரிக்கின்றனர். மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கின்றனர். மக்கள், வாகனங்கள் நடமாட்டம் குன்றிவிட்டது பெற்றோர் தடுப்புக்காவலிலும், விசாரணைக்கும் அழைக்கப்பட்ட தம் பிள்ளைகள்பற்றி பகிரங்கமாக ஓலமிட்டுக் கண்ணீர் வடிக்கின்றனர்.

எந்த 'யுத்த' சூழ்நிலையிலும் நாட்டைப் பரிபாலிக்கும் அரசு மக்கள் அனைவரையும் பாதுகாப்பது மட்டுமல்ல, தினசரி வாழ்க்கை ஸ்தம்பித்துவிடாது தடைகளை நீக்கும் பொறுப்புடையது.

நாட்டின் காவற்படைக்கும், ராணுவத்துக்கும் இன்று யாழ்ப்பாணத்தில் கடமைபுரிவது கடினமென்பதை நாம் உணரவேண்டும். இந்த அபாயத்தை நீக்க பொதுமக்கள் எவ்வகையிலும் முன்வருவரென்று எதிர்பார்க்க முடியாது. மூன்று பகுதியினருக்கும் அபாயமான 'முக்குடுசிக்கல்' யாழ்ப்பாணமெனலாம்.

பாதுகாப்பு அமைச்சரின் காவற்படை, இராணுவம் இங்குநிலவும் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தி, காலகதியில் அதனை ஒழித்துக்கட்டும் நோக்குடையது. அமைச்சர் பதவியேற்ற சுபமுகூர்த்தம் தொட்டு இன்றுவரைக்கும் தொடரும் அழிவுகள் எத்தனை பொதுமக்களின் உயிரைக் குடித்துவிட்டன? பொருளாதார அழிவு எத்தகையது?

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் இன்றுவரைக்கும் நடைபெறும் கொடுமைகள் யாழ்ப்பாணத்தை முற்றாக அழித்துவிடும் அச்சத்தை ஏற்படுத்துகின்றன, படை நீக்கம் நிச்சயம் நிலைமையை மாற்றவல்லது. இந்த நிலையில், 'கெடுகிறேன் பந்தயம்பிடி' என்ற போக்கு இரு பகுதியினருக்கும் உதவாது.

வட பகுதியின் இன்றைய நிலையைப் பாதுகாப்பு அமைச்சர் தம்முடைய பச்சைக் கண்ணாடியால் பார்க்கும்பொழுது ராணுவ அட்டகாசங்களால் மக்கள் மட்டுமல்ல; அவர்களின் வீடுவாசல் மட்டுமல்ல; அரசாங்க ஸ்தாபனம் போன்ற கீர்த்திபெற்ற பாடசாலைகள், நூல்நிலையங்கள் கணப்பொழுதில் பிடிசாம்பராவதைப் புரியமுடியவில்லை

நீண்டகாலப் போர் ஒன்றுக்கு ஆயத்தம் செய்வதாகவும், தென்பகுதி மக்கள் அமைதியாக இருந்தால் வடபகுதியில் வெற்றி என்ற அதே பல்லவியைப் பாடுகிறார்.

துரதிர்ஷ்டவசமாக அமைச்சரின் கூற்றுகளும் கேஷ்யங்களும் கைகூடுவதில்லை

இன்று இங்கு வாழும் மக்களைப் பாதுகாக்க வல்லவர் யார்? ராணுவ அட்டகாசங்களிலிருந்து இந்த ஊரும் மக்களும் காக்கப்படவேண்டியவை.

இங்கு 'போர்' என்ற நிலைமையை உருவாக்கும் 'புலிப்' படையினரையும் ராணுவத்தையும் மோதலிலிருந்து தவிர்த்து ராணுவத்தை வெளியேற்ற வல்லவர் யார்?

இன்றைய நெருக்கடியை நினைக்கும்போது 1982இல் பேரூட்டில் நடந்த ஆக்கிரமிப்பு நினைவுக்கு வருகிறது. அங்கு இஸ்ரேலிய படை இடைவிடாது குண்டுமாரி பொழிந்து அந்நகரை மிக உக்கிரமாகத் தாக்கி வந்தது குழந்தைகளின் அங்கங்கள் குண்டுவெடிப்பின் வேகத்தால் நெடுந்தூரம் பறந்தன அமெரிக்காவே கவலை கொண்டது. உலகம் இச்செயலை வெறுத்தது.

இம்மண்ணுலகத்தில் ஜனாதிபதி றீகன் ஒருவரே அதனை உடனடியாக நிறுத்த வல்லவர், அவரைப் பிடிக்க யாரைப் பிடிக்கவேண்டும்? என்ற கேள்வி எழுந்தது. அவருடைய இரண்டாவதையல்ல, பாதுகாப்பு அமைச்சரையல்ல. அவருடைய அந்தரங்க செயலாளர் மைக்கீல் டீவரையே (Michael Deaver)

இஸ்ரேலியப் பிரதமர் பெகினுக்கு றீகனின் தொலைபேசிக்கட்டளை 20 நிமிடத்தில் இந்த அட்டூழியத்தை நிறுத்தியது. எங்களுக்கு யார் உண்டு?

## ● இளைஞர்கள் கைதாவதன் எதிரொலி:
# மலையக தோட்டப்பகுதியில் பதற்ற நிலை!

(கண்டி)

மலையகப் பகுதியிலுள்ள சில தோட்டங்களில் இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்படுவதைத் தொடர்ந்து பதற்றநிலை உருவாகியுள்ளதாக தொழிற் சங்கங்கள் புகார் செய்துள்ளன.

இதன் எதிரொலியாக சாமிமலைத் தோட்டத்தில் ஏராளமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதாக தொழிற்சங்கமொன்றின் பிரமுகர் ஒருவர் நேற்று 'ஈழநாடு' விடம் தெரிவித்தார்.

தோட்டப் பகுதிகளில் இளைஞர்கள் தொடர்ந்து கைதுசெய்யப் படுவார்களானால் பல தோட்டங்களில் வேலைநிறுத்தம் தலைதூக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தொழிற்சங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

# துர்க்காதேவி நாளை தேரில் பவனி!

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தேர் திருவிழா நாளை நடைபெறவிருக்கிறது. கடந்த 27-ம் திகதி இவ்ஆலயத்தின் உற்சவம் ஆரம்பமாகி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இன்று பெரிய சப்பறத் திருவிழாவையடுத்து நாளை தேர் உற்சவம் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தேர் உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு உதவும் வகையில் தெல்லிப்பளை இந்து இளைஞர்சங்கத் தொண்டர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் இயக்க தொண்டர்கள், தெல்லிப்பளை பாதுகாப்பு சேவையினர், மற்றும் சாரணிய இயக்கத்தினர் சேவையில் ஈடுபடவிருக்கின்றனர்.

விசேட பஸ் சேவைகளும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மறுநாள் ஆவணி திருவோணத்தில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள ''துர்க்கா புஷ்கரணி'' என்னும் தீர்த்தத் தடாகத்தில் தீர்த்த உற்சவம் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நாளை மறுதினம் ஹஜ்ஜுப் பெருநாள்:
# முஸ்லிம்களின் முக்கிய கடமை 'ஹஜ்' யாத்திரை

வி. அபூபக்கர்

எஸ். ஏ. ஸி. சஹாப்தீன்

(முள்ளியான் முஹியதீன் பள்ளிவாசல் சங்கம்)

*அல்லாஹ்வின் படைப்புகளில் எதையும் வீண் என எண்ணாதீர்கள்!*
*— அல்குர்ஆன்*

இஸ்லாத்தின் முக்கிய கடமைகளில் ஒன்று ஹஜ்பிரயாணம். அந்தக் கடமையை வசதி படைத்தோர் விரைவாகச் செய்ய வேண்டும்.

ஹஜ் என்றால் இறைவனை நெருங்குதல் என்பதுபொருள். ஹஜ் யாத்திரை என்பது ஒவ்வொரு முஸ்லிம்களுக்கும் ஐந்தாவது கடமையாகும். முதல் கடமை. இறைவனையும் இறைதூதர் முகமது நபியையும் நம்புவது; இரண்டாவது நாள் ஒன்றுக்கு ஐந்து முறை தொழுவது. மூன்றாவது ரமழான் நோன்பு நோற்பது; நான்காவது பணம் படைத்தவர்கள் நூற்றுக்கு இரண்டரை சதவிகிதம் ஏழைகளுக்கு ஜக்காத் (தானம்) கொடுப்பது ஐந்தாவது ஹஜ்யாத்திரையாகும்.

இந்த ஐந்தாவது கடமை எல்லோருக்கும் கட்டாயமான கடமையல்ல. சிலருக்கு இந்தக் கடமையில் இருந்து விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

ஏழைகள், உடல் ஆரோக்கியம் இல்லாதவர்கள், சொத்து மதிப்புக்கு மேல் கடன் உள்ளவர்கள், சொந்தமாக ஒரு வீடுகூட வாங்க முடியாத நிலையிலுள்ளவர்கள் இவர்களுக்கெல்லாம் ஹஜ் யாத்திரையில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இவை எல்லாவசதிகளையும் இருப்பவர்கள்கூட குடும்ப கடமையை முழுமையாக நிறைவேற்ற முடியாதவர்களாக இருந்தால் ஹஜ் யாத்திரை செய்ய வேண்டியதில்லை.

உதாரணமாக சிலவற்றை இங்கு கூறலாம். வயது வந்த பெண்கள் திருமணத்திற்கு தயாராக இருக்கும் போது அவர்களுடைய திருமணத்திற்காகச் சேமித்து வைத்திருக்கும் பணத்தில் ஹஜ் யாத்திரை மேற்கொள்ளக்கூடாது. குடும்பக்கடமைகளை நிறைவேற்றிய பிறகுதான் ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள வேண்டும்.

ஒருவர் இந்த புனித யாத்திரையை மேற்கொள்ளும் போது அவர் திரும்பிவரும் வரையிலான குடும்பச் செலவுகளுக்கு பணம்கொடுத்து விட்டுத் தான் யாத்திரையை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு முஸ்லிம் குடும்பக் கடமையை நிறைவேற்றியவராகவும், யாத்திரைக்கான சேமிப்பு உள்ளவராகவும் இருந்து விட்டால் மட்டும் போதாது. அவர் மக்களிடம் மன்னிப்பைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

இவற்றைவிட ஹஜ்யாத்திரைக்கு உணவுக்கட்டுப்பாடு போன்ற விரதக்கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. ஆனால் யாத்திரை மேற்கொள்ளும் போது தூயவெள்ளை ஆடைகளைத் தான் அணிய வேண்டும். தொப்பி அணியக் கூடாது. பட்டுப்போன்ற உயர்ரக ஆடைகளை அணியாமல் பருத்தி போன்ற எளிய ஆடைகளை அணிய வேண்டும். அதாவது, தைக்கப்படாத ஆடையாக இடுப்பில் கட்டிக் கொள்ள ஒரு துண்டும் மேலே போட்டுக்கொள்ள இன்னொரு துண்டுமாக இருக்கவேண்டும்.

ஹஜ்யாத்திரையை பெண்களும் மேற்கொள்ளலாம். அவர்கள் (கோஷா) முக்காடு போட்டுக் கொள்ள வேண்டுமென்றாலும் முகத்தை மூடி மறைத்துக் கொள்ளக்கூடாது திறந்த முகத்தோடும் இறை பக்தியுடனும் செல்ல வேண்டும். இன்றைய தினம் புனித தினமான ஹஜ் பண்டிகையை நாம் கொண்டாடுகிறோம்.

## உற்சவ காலத்தில்
# தனியார் பஸ்களின் விசேட சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தனியார் பஸ்கள்,தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலயம், தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயம் ஆகியவற்றுக்கான வருடாந்த உற்சவத்தின்போது விசேட சேவையாற்ற முடிவு செய்துள்ளன.

தனியார் பஸ்வண்டி இயக்குனர் சங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற உற்சவ காலங்களில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகள் தரித்து நிற்கும் இடங்களிலேயே தனியார் பஸ்களும் தரித்துநின்று பிரயாணிகளுக்கு சேவையாற்றி வந்ததாகவும், இந்த நடைமுறை, இம்முறை தடைசெய்யப் பட்டுள்ளதால் விசேஷமாக ஒழுங்கு செய்யப் பட்டுள்ள இடத்தில் தனியார் பஸ்கள் தரித்து நின்று சேவையாற்றுவதாகவும் இயக்குனர் சங்கம் தெரிவித்துள்ளது.

துர்க்காதேவி ஆலயத்தில் காங்கேசன்துறை- யாழ்ப்பாண பிராதனவீதியிலுள்ள இரு பஸ்தரிப்பு நிலையங்களிலும், 4 ம் திகதி தொடக்கம் 7 ம் திகதி வரையும், செல்வச்சந்நிதி கோவிலில் 6 ம் திகதி தொடக்கம் 10 ம் திகதி வரையும் தனியார்பஸ்கள் சேவையிலீடுபடும் என்றும் இயக்குனர் சங்கம் தெரிவித்துள்ளது.

(மா)

# யாழ். சட்டத்தரணிகளுக்கு கசப்பான அனுபவங்கள்!

[யாழ்ப்பாணம்]

''கொழும்புகோட்டைரயில் நிலையத்தில் கடந்த மாதம் 16ந் தேதிஇரவு நானும் சுமார் 20 இளைஞர்களும் வலுக்கட்டாயமாக வாகனங்களில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டோம். சட்டத்தரணியென்று தகுந்த ஆதாரம் காட்டியும் விளங்கவில்லை. மறுநாள் காலைதான் வெளிவர முடிந்தது. சட்டத்தரணிகள் பல்வேறு விதத்திலும் பாதிக்கப்படுகின்ருர்கள்''

யாழ். சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் பேசிய சட்டத்தரணி செல்வமுருகானந்தன் மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ். சட்ட நூலகத்தில் சங்கத் தலைவர் எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் சட்டத்தரணி வி. தவபாலன் கூறியதாவது; ''சிலவாரங்களுக்கு முன் என் அருகில் இருக்கும் சட்டத்தரணி தாக்கப்பட்டு கடலில் வீசப்பட்டார், தீவுப்பகுதியை சேர்ந்த மற்ருெரு சட்டத்தரணி முகாமில் ஒருவார காலம் தடுத்து வைக்கப்பட்டார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மற்ருெரு சட்டத்தரணி வாகனத்தினல் அடிக்கப்பட்டதுடன் விசாரணைக்குட்படுத்தப்பட்டார், வவனியாவிற்கு செல்ல முடியாத நிலைமையில் மற்ருெரு சட்டத்தரணி பாதிக்கப்பட்டுள்ளார். அச்சுவேலியில் சட்டத்தரணி ஒருவரின் வீடு தீக்கிரையாகியுள்ளது. இப்படியே சட்டத்தரணிகள் பல விதத்திலும் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். இவற்றை எல்லாம் ஆதாரங்களுடன் மகஜர் மூலம் எடுத்துக் கூற வண்டும்

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் பேசுகையில் சட்டத்தரணிகள் பாரதூரமான விதத்தில் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் வீடுகள் சொத்துக்கள் எரிக்கப்பட்டு வருவதாகவும் இவற்றைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினுர்.

சட்டத்தரணிகள் ஆர். விசுவநாதன் பேசுகையில் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறையில் சட்டத்தரணி ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளாரென்றும், மற்றும் பல இடங்களிலும் சட்டத்தரணிகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் நிலையங்களுக்கு சட்டத்தரணிகள் வழக்கு விடயமாக செல்லமுடியாதிருப்பதாகவும் மேலிடத்தின் கவனத்திற்கு இவற்றைக் கொண்டு வரவேண்டு மென்று கூறினுர்.

சட்டத்தரணி எஸ். நாகராசா பேசுகையில் நீதிமன்றங்களை ஒருவாரம் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் கூறினுர்.

சட்டத்தரணிகளான எஸ். லோகேஸ்வரன், எஸ் சிவலோகநாதன், எஸ். கோடீஸ்வரன், சி. செல்லத்துரை ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினுர்கள். (க

# ''ஹஜ்பெருநாளை அமைதியாக கொண்டாடுவோம்''

## முஸ்லிம் மக்கள் முன்னணி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஹஜ் பெருநாளை அமைதியாக இம்முறை கொண்டாடுவதென்ற தீர்மானத்தை யாழ்ப்பாணம் முஸ்லீம் மக்கள் முன்னணி மத்திய கமிட்டி எடுத்துள்ளது

யாழ்ப்பாணத்தில் நடந்த மத்திய கமிட்டிக் கூட்டத்தில், கால் நூற்ருண்டுகளுக்கு மேலாக. தமிழ் மக்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. முஸ்லிம் மக்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர். நமது சமுதாயத்துக்கு எதிராக ஊடுருவியுள்ள பிற்போக்குவாத முதலாளித்துவ சக்திகளைக் களைந்தெறிவோம் என்று முன்னணியின் செயலதிபர் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை, மன்ஞர், சுன்ஞகம் சம்பவங்கள் குறித்து கவலையும், கண்டனமும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கலாசாரம்,பண்பாடுகளை பேணிப்பாதுகாக்க

# இந்துக்களுக்கு புனிதமான இயக்கம் தேவை!'

(வண்ணுர்பண்ணை)

'இந்து கலாசாரத்தையும், இந்துமத பண்பாடுகளையும் பேணிப்பாது காப்பதற்கும், கட்டி வளர்ப்பதற்கும் ஒன்றுபட்ட புனிதமான ஒரு இயக்கம்இன்று எம்மத்தியில்இல்லை இந்துக்களுக்கு இப்படியான ஒரு இயக்கம் மிகவும் அவசியம் தேவையாகின்றது'' என்று நல்லூர் உற்சவகால சேவையில் ஈடுபட்ட தொண்டர்களுக்கு சான்றிதகள் வழங்கும் வைபவத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றிய யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி. வி. கே.சிவஞானம் தெரிவித்தார்.

நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற இவ்வைபவத்தின் போது உற்சவகால சேவையில் ஈடுபட்ட தொண்டர் சபைகளின் உறுப்பினர்களுக்கு யாழ். 'குளோபல்' ஸ்தாபன சார்பில் தேனீர் விருந்துபசாரணையும் இடம்பெற்றது.

நல்லூர் உற்சவகாலத்தில் 25 தினங்களும் தொண்டர்சேவைகளை நடத்திய யாழ். மாவட்ட இந்துஇளைஞர் பேரவை, யாழ். மாவட்ட சாரணியர் இயக்கம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை, ஆகியவற்றின் தொண்டர்கள் இவ்வைபவத்தின் போதுகௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கான சான்றிதழ்களை மாநகர ஆணையாளர் திரு சி.வி.கே.சிவஞானம் வழங்கினுர்

யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு வி என்.சிவராசா, உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவரும் தினகரன் பிரதம ஆசிரியருமான திரு. சிவகுருநாதன் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவுத் தளபதி முகாந்திரம் இ. பி. இராசையா, சாரணர் இயக்கத்தளபதி திரு எஸ். ஏகாம்பரநாதன், யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைச் செயலாளர் திரு. இ. சுவாமிநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

# விவசாயிகளுக்கு இப்படியும் கஷ்டம்!

(மாவிட்டபுரம்)

உற்பத்தி செய்யும் பொருட்களை தாங்களே விற்பனைசெய்ய வேண்டிய நிலை இங்குள்ளவிவசாயிகளுக்கு உருவாகியுள்ளது.

மாவிட்டபுரம், தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி பகுதி விவசாயிகள் முன்னர் தாம் உற்பத்திசெய்யும்பொருட்களை சுன்ஞகம், மருதனுமடம்சந்தைகளுக்கு எடுத்துச் சென்று அங்கு தரகர்கள் மூலம் விற்பனை செய்துவந்தனர்.

ஆனல் தற்போதைய சூழ்நிலையில் அங்கு உற்பத்தி செயயப்படும் பொருட்களை கொண்டு சென்று விற்பனை செய்ய ஏற்பட்ட பிரச்னைகளால் விவசாயிகள் தெல்லிப்பழை, காங்கேசன்துறையில் உள்ள சந்தைகளில் தாமே சென்று விற்பனை செய்கிருர்கள்.

# பொலிஸ் நிலைய தொழிலாளி விடப்பட்டார்

(மாவிட்டபுரம்)

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத் தொழிலாளி கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் வேலை செய்யும் தொழிலாளியான செபநேசன் என்னும் 30 வயதுடைய நபர் இனந் தெரியாதவர்களால் கண் கட்டப்பட்ட நிலையில் கடத்தப்பட்டதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தது.

கடத்தப்பட்ட இந்நபர் பின் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# கிளிநொச்சி இ. சே. மன்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிராந்திய தேசிய இளைஞர்சேவை மன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் இளைஞர் சேவை அதிகாரி எம். பரராசசேகரம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவானுர்கள்

தலைவர்:- வி. மகேந்திரராசா, உப தலைவர்:- வே. கிருஷ்ணபிள்ளை, செயலாளர்:- எம். பரராசசேகரம், உப செயலாளர்:- மிக்கல் ஞானப்பிரகாசம், பொருளாளர்:- சி. இதயரூபன், விளையாட்டுக் குழு:- வி. வசந்தராசா, சுகாதாரக் குழு:- த. வசீகரன், கல்விக் குழு:- எம். சலீம், இளைஞர் வேலைவாய்ப்பு:- பி. பாக்கியமூர்த்தி.

# ஊர் வாய்

நக்கீரர்

வெளிநாட்டில் கப்பலில் வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் மரணமடைந்து 45 நாட்களுக்குப் பிறகுதான் கொழும்பிலே மரணச்சடங்கை நடத்தக்கூடியதாக இருந்தது என்று 'இப்படியும் நடக்றது' என்ற பகுதியிலேவாசித்தோம். உண்மையிலே பல இடங்களில் இப்படித்தான் நடக்கிறது.

பாசத்தின் இறுக்கத்தால் பெற்றேரும், மனைவி, மக்களும் அந்த உயிரற்ற உடலை யாவது ஒருமுறை பார்ப்போமென்று பல ஆயிரக்கணக்கில் செலவுசெய்து பொறுமையுடன் காத்திருப்பார்கள். இங்கே ஒருவர் காலமாகி நெருங்கியவர்கள் வெளிநாடுகளில் இருக்கும்போதும் இப்படித்தான் நடக்கும். அவர்கள் வரும்வரை உடல் பதப்படுத்தி வைக்கப்படும். சில வேளைகளில் பாசத்தை வேறு சக்திகளும் வென்றுவிடும். இதற்கு நல்ல உதாரணம் சில மாதங்களுக்கு முன் நடந்த சம்பவமொன்று.

கதையை ஆரம்பத்திலிருந்து சொல்லவேண்டும்.

தகப்பன் தனது ஒரேமகளை செல்லமாக வளர்க்கிருர். இரட்டைப் பின்னலுடன் தகப்பன் கையைப் பிடித்துக் கொண்டு துள்ளித் துள்ளி பள்ளிபோன காலம் முதற் கொண்டு பல்கலைக்கழகத்திலே இருக்கும்போது காரிலே ஏற்றித் திரிந்த காலம்வரை ஒரு குறையுமில்லாமல் அவள்வளர்கிருள், பின்பு தகப்பன்தான் வாழ்வுபூரா சேர்த்து வைத்த பணத்தைக் கொடுத்து பெரிய உத்தியோகத்திலே உள்ள ஒருவனைத்தேடி கலியாணம் செய்து வைக்கிருர்.

பேரப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு இனி நிம்மதியாகக் கண்ணைமூடலாம்என்று பெரியவர் நினைக்கிருர்.

வெளிநாட்டுத் தொழில்தரும் பணத்தின் சக்தி, பாசக் கயிற்றை அறுத்துவிடுகிறது. பெரியவர் கலங்கிய கண்களுடன் விடை கொடுக்கிருர்

''என்டை ராசாத்தி, நீ எங்கை இருந்தாலும் என்டை கடசி நேரத்திலை பக்கத்திலை வந்திடு. உன்னைக் கண்ட பிறகுதான் கண்ணை மூடுவன்''

''ஓம் பப்பா, நீங்கள் ஒண்டும் யோசியாதேங்கோ, உங்களுக்கு ஏதாவது கடுமையெண்டால் உடனே அறிவியுங்கோ. நாங்கள் வந்திடுவோம்'' என்று அருமைமகள் வாக்குக்கொடுத்துப் போகிருள்.

சில மாதங்களில் பெரியவருக்கு அந்த 'ஏதாவது கடுமை' வந்து விடுகிறது. அவரை வீட்டிலுள்ள மற்றேரும் அயலாரும் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கிருர்கள். தொலைபேசி மூலம் மகளுக்குச் செய்தி போகிறது. அவளும் கணவனும் தொலைபேசி மூலம் வைத்தியசாலை டொக்டர்மாருடன் தொடர்பு கொள்கிருர்கள். மருமகன் தனது நண்பனுன வைத்திய நிபுணருடன் கதைக்கிருர். ''இங்கே வைத்தியம் சிறந்த முறையில் செய்யப்படுகிறது. யோசிக்க வேண்டாம். நீங்கள் வந்தும் மேலாகச் செய்யக் கூடியது ஒன்றுமில்லை'' என்ற பதில் கிடைக்கிறது ஒவ்வொரு நாளும் காலை ஒருமுறை மாலை ஒருமுறை மகள் வைத்திய நிபுணருடன் தொடர்பு கொள்கிருள். ''பப்பாவுக்கு நிலமை மிக மோசமானல் உடன் டெலிபோன் பண்ணுங்கள்'' என்று சொல்லிவைக்கிருள். ஆனல் பப்பா மோசமான நிலையை அடையாமலே மோசம் போய் விடுகிருர். மகளுக்கு செய்தி போகிறது 'பப்பா விரும்பிய மாதிரி அவரை உயிரோடு பார்க்க முடியவில்லை இனி நான் போய் என்ன போகா விட்டால் என்ன' என்ற எண்ணத்தா

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

லும் வேறுசில பிரச்னைகளாலும் மகளால் இங்கு வர முடியவில்லை பணத்தை அனுப்புகிருள் வெகு சிறப்பாக மரணச்சடங்கும் எட்டுச்செலவும் நடைபெறுகின்றன். சில நாட்களுக்குப் பின்னர் மகளிடமிருந்து தாய்க்கு ஒருபாசம் வருகிறது அதிலே ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒரு 'கசட்' இருக்கிறது மகளின் குரலைத் தாய் ஆவலுடன் கேட்கிருள்.

''அம்மா, நான் வீட்டிலிருந்து பேசுறேன். பப்பா போய் சரியாய் பத்து நாளாகிறது.

முன்னுக்கு குஞ்சு நிசகிருள். அப்பிள் தின்னுருள். அம்மம்மாவோடையும் அம்மப்பாவேடையும் கதைக்கோணும் எண்ணுருள். ... ... ...

ஐயோ பப்பா ...... (அழும் சத்தம்) ம் ... ம் .. ம் .. முதல் நாளே நான் வந்திருக்கலாமே ..... ஐயோ பப்பா ...... (அழும் சத்தம்) ம் .. ம் ... ம் .. ... ... ''

தாய்க்கும் அழுகை வருகிறது. சேர்ந்து அழுகிருள். இது யாழ்ப்பாணத்தில் சில மாதங்களுக்கு முன் நடந்தது. நம்புவதற்குக் கஷ்டமாக இருந்தால் மேலே படிக்க வேண்டாம். ஏனெனில் வேருேரிடத்தில் இதேபோல் நடக்க பிள்ளைகள் எல்லோரும் வெளிநாடுகளில் இருந்தார்கள். ஒருவரால்கூட வர முடியவில்லை. மரணச் சடங்கு முழுவதும் 'வீடியோ' படமாக எடுக்கப்பட்டு வீடியோ 'கசற்' அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நம்புவீர்களா?

# கடற்படை வீரர்கள்

## திருமலை நீதிமன்றத்தில் ஆஜர்

(திருகோணமலை)

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான இளம் பெண் மீது பலாத்காரம் புரிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இரண்டு விமானப்படை வீரர்களும் ஒரு சிவிலியனும் திருமலை நீதவான் திரு. ஹேமால் செனரத்ன முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சீனன்வாடிப் பொலிஸார் அச்சமயம் கூறியதாவது:

சம்பவதினம் இரவு, இளம் பெண்ணும் அவரது கணவனும் நித்திரையாக இருந்த சமயத்தில் வீட்டுக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு எழுந்து கதவைத் திறந்து பார்த்த பொழுது, இரண்டு விமானப்படை வீரர்கள் இன்னொருவருடன் நின்றதைக் கண்டனர்.

''என்ன வேண்டும்'' என்று பெண்ணின் கணவர் கேட்டதற்கு, ''உங்கள் வீட்டைச் சோதனையிட வந்திருக்கின்றேம்'' என்று கூறிவிட்டு தேநீர் தரும்படி கேட்டார்களாம்.

உடனே கணவன் தேநீர் வாங்கிவருவதற்காக ஆயுதப் படை வீரர்களுடன் வந்து இருந்த சிவிலியனையும் அழைத்துக்கொண்டு கடைக்குச் சென்றுராம்.

பின்னர் மனைவி வீட்டைப் பூட்டிவிட்டு உள்ளே சென்று விட்டார். வெளியே நின்ற இரண்டு ஆயுதப்படை வீரர்களும் மீண்டும் கதவைத்தட்டினர். வீட்டினுள் தனியே இருந்த மனைவி கதவைத் திறக்க, ஆயுதப்படை வீரர் ஒருவர் உள்ளே புகுந்து மனைவி மீதுபலாத்காரம் புரிந்தாராம். மற்ற வீரரும் அதேபோல் நடந்துகொண்டாராம்.

கணவன், சிவிலியனுடன் தேநீர்கொண்டு வந்தபொழுது இரண்டு ஆயுதப்படை வீரர்களும் மறைந்துவிட்டனராம் இப்படிப் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்களைப் பிணையில் விடுவித்த நீதவான், சந்தேக நபர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்செய்வதற்கு பொலிஸாருக்கு கால அவகாசம் வழங்கினுர்.

# சாதனைப்பட்டியலில் ஒரு அத்தியாயம் முடிகிறது!

தோல்வியைக் கண்டு அந்த வீரன் துவண்டதுமில்லை; வெற்றியைக் கண்டு ஆர்ப்பரித்ததுமில்லை இரண்டையுமே அவர் தன் வாழ்வில் சமமாகக் கற்று, எதிர்நீச்சல்போட்டு பல சோதனைகளில் வெற்றி கொண்டு, வெற்றித் திருமகனாக, பல உலக சாதனைகளின் உரிமையாளனாகத் திகழ்ந்தார்!

வல்வெட்டித்துறை மண்ணில் பிறந்து, எங்களுக்கெல்லாம் கண்ணாக இருந்த அவர், எங்கெல்லாம் சென்றாலும் பிறந்த மண்ணை அவர் மறந்ததில்லை!

என்றோ ஒருநாள், தனக்கு மரணம் வரும்போது, தனது இறுதிக் கிரியைகள் பிறந்த ஊரில் நடக்கவேண்டுமென்று விரும்பினார். அந்த ஆசையைத் தனது மனைவி மானலியிடம் சொல்லியுமிருந்தார் தன் ஊரை அவர் உயிராக நேசித்தார் என்பதற்கு இதைவிட வேறு சொல்ல இல்லை!

ஆனாலும், ஆழிக்குமரன் ஆங்கிலக் கால்வாயில் வீர மரணமெய்தியதால், சந்தர்ப்ப சூழ்நிலை அவரது அந்த ஆசையை நிறைவேற்ற இடமளிக்கவில்லை. ஆயினும், அவரின் அஸ்தி அவர் நீச்சலில் முதற் சாதனையை நிகழ்த்த ஆரம்பித்த வல்வெட்டித்துறைக் கடலிலேயே கரைப்பது அவர் ஆத்மசாந்திக்குச் செய்யும் நல்ல காரியமாகும்.

எந்தச் சாதனையை ஆழிக்குமரன் நிகழ்த்தினாலும், அருகே அன்னையார் இராஜரத்தின அம்மாள் ஆசிகூறி ஆரம்பித்துவைப்பார். அது அவருக்கு ஒரு தனி உற்சாகத்தைக் கொடுக்கும். இந்தமுறை அன்னையாரோ, அவரது மனைவியோ, பிள்ளைகளோ இருக்கவில்லை. இதுவும் சிலநேரம் ஒரு கெட்ட சகுனமாக இருந்திருக்குமோ?

யாழ்ப்பாணத்தில் பிலியட்ஸ் தடியை மேலும் கீழுமாக உயர்த்துவதில் உலக சாதனையை ஏற்படுத்தும் நிகழ்ச்சியை வெற்றிகரமாக முடிக்கப் பல விதங்களிலும் என்னால் உதவ முடிந்ததனை ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன். எத்தனை உலக சாதனைகளை நிகழ்த்தினாலும், மிகச் சாதாரணமாகவே எல்லாருடனும் பழகுவார்.

பணத்தை அவர் மதிக்கவில்லை அல்லது அவர் எப்பொழுதோ கோடீஸ்வரனாகியிருப்பார். அவர் சம்பாதித்ததெல்லாம் நட்பையும், புகழையும்தான்.

இந்த இளம்வயதில் அவர் மறைந்திருக்கக்கூடாது. ஆனாலும், அவர் விருப்பம்போல, சாதனைசெய்து கொண்டிருக்கும்போதே வீரமரணத்தைத் தழுவி விட்டார்! அவர் மறைந்தாலும் என்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டே இருப்பார்!

— வி அருள்செல்வம்



ஆங்கிலக் கால்வாயில் நீந்தமுன், அவருக்கு அங்கு கிறீஸ்பூசும் போது எடுத்தபடம்.

# கடலன்னை மடியில் புகழ்மைந்தன் முடிவு!

ஆழியை நிலமாய்க்கொண்டு நீ ஆடிய களங்கள் கண்டு
அகிலத்து அன்பரெல்லாம் அதிசயத் தாழ்ந்தார் அண்ணா!
ஆழியின் குமரனென்று நின்னை அனைவரும் ஏற்றி நின்றார்
ஆழிபோல் இளையரெம்மில் ஆழ அன்பினைக் காட்டி நின்றாய்!
தாழியை வெண்ணெய் திரளும் வேளையில் உடைத்தல்போன்று
தன்னேரில் பணியையேற்ற தமையனார் முடிக்க முன்னர்
ஆழியின் மகவுதன்னை அன்னை ஆழியின் மடியில் முடித்த
ஆங்கிலக் கால்வாய் கொடிது; ஆண்டவன் செயலும் கொடிது!

—செல்வி கோகிலா விவேகானந்தன்.

## வானொலி இன்று

காலை

- 5-30 நாதாஞ்சலி
- 5-35 தோத்திரமாலை ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம்
- 6-00 சைவநற்சிந்தனை
- 6-05 இஸ்லாமியநற்சிந்தனை
- 6-10 அறநெறி ஆரம்
- 6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
- 6-30 செய்திகள்
- 6-40 அறிவிப்புகள்
- 6-50 மெல்லிசைப்பாடல்
- 7-00 பாட்டு கே. வி. நாராயணசாமி
- 7-30 மாகாணச்செய்திகள்
- 7-35 இசையமுதம்
- 8-05 வாத்தியவிருந்து
- 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
- 8-45 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை

- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6-15 அருளமுதம்
- 6-30 குன்றின் குரல் எஸ். அழகுப்பிள்ளை
- 7-00 களத்துமேடு
- 7-15 நாடகம் ''உண்மை உதயமான போது'' ஜமுனாராணி நடராசா
- 7-30 உலகச் செய்திகள்
- 7 45 விசேஷ பேச்சு 'ஹஜ்ஜுப் பெருநாள்' அல்ஹாஜ் எம். எம் அப்துல் காதர்
- 7-40 நாட்டுப்பாடல்
- 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
- 9-00 செய்திகள்
- 9-10 செய்தியின் பின்னணியில்
- 9-15 அறிவிப்புகள்
- 9-30 கலைக்கோலம்
- 10-00 தாளவாத்தியக் கச்சேரி கே. கண்ணன்
- 10-30 குரல்வகை
- 11-00 ஒலிபரப்பு முடிவு

# ரூ.73,500 கைக்கடிகாரம் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள கடையொன்றில் சுமார் 73 500 ரூபா பெறுமதியான கைக்கடிகாரங்கள் திருடப்பட்டுள்ளது.

ஓடுகளைக்கழட்டி தகடுகளை வெட்டி பலகைகளை உடைத்து இத்திருட்டு நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இக்கடையில் வானொலிகள் மற்றும்பலசாமான்கள் இருந்தபோதும் கடிகாரங்கள் மட்டுமே திருடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்திருட்டு பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

## புதிய எம். பி

(கொழும்பு)

அம்பலாங் கொடை எம். பி.யாக திரு. ரைட்டர் திலகசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் இவர் தெரிவு செய்யப்பட்டார்.

# இன்றைய பலன்

மாதம்— ஆவணி
திகதி— 20(05-09-1984)
வாரம்— புதன்
திதி— தசமி காலை 7-47ன் மேல் ஏகாதசி
நக்ஷத்திரம்— பூராடம் இரவு 10-31 வரை

மேடம்:- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலமை தென்படும் சிலர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும்உடல் நலம் பாதிக்கப்படலாம் பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவும்.

இடபம்:- உணர்ச்சிமயமான தினம் மனப்போராட்டங்கள் நடைபெறும் உடல் நலனும் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

மிதுனம்:- கொள்வனவுகளில் நல்ல திருப்பங்கள் ஏற்படும் வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு கல்வித் துறையில் முன்னேற்றம் தென்படும்.

கடகம்:- மகிழ்ச்சிகரமான தினம் குடும்பத்தில் விருந்தினர் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள் கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்

சிங்கம்:- தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும்எதிபாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம் ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்குஅவதானம் வேண்டும்.

கன்னி:- குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும் இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும் பிள்ளைகளினால் பெருமைக்கும் இடமுண்டு.

துலாம்:- தாம்பத்தியவாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் களஸ்திரவழியில் பொருள்வரவுக்குமிடம் உண்டு கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள்.

விருச்சிகம்: இறைவழிபாடு மேலிடும் இதயத்தில் அமைதியும் ஏற்படும் பிதாவழிமூலம் நல்ல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு முதியவர் ஒருவர் உங்களுக்குத் தக்கசமயத்தில் ஆதரவுதருவார்.

தனுசு:- வெற்றிப்பதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில்துறையில் புதியஉற்சாகம் பிறக்கும் எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

மகரம்:- புதிய கோணத்திலிருந்து பொருள் வரவிற்கும் இடமுண்டு துணிவையேதுணையெனக் கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள் பொதுசன தலைமையும் தேடி வரும்.

கும்பம்:- எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும் ஆணவப் போக்கு மற்றவர்களின்எதிர்ப்பைத்தேடித்தரும் முகமன் கூறுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடனிருக்கவும்.

மீனம்:- அந்நியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் வயிற்றுக் கோளாறுகளுக்கும் இடமுண்டு உணவு விடயத்தில் அதிகம் கவனம் செலுத்தவும்.

திருமலை
ரவீந்திரன்

# பல்கலைக்கழக பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து மாணவர்களின் நலன் கருதி யாழ். பல்கலைக் கழகத்தில் இம்மாதம் 12ம் திகதி ஆரம்பமாகவிருந்த பரீட்சைகள் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இப்பரீட்சைக்கு சுமார் 500 மாணவர்கள் தோற்றவுள்ளார்கள்.

அண்மையில் பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களினால், அங்குள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமது வீடுகளிலிருந்து பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் பரீட்சையை ஒத்திவைக்க வேண்டுமென, மாணவர் குழு துணைவேந்தரையும், பதிவாளரையும் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து கலை. விஞ்ஞான மருத்துவ பீடாதிபதிகளுடன் துணைவேந்தர் பதிவாளர் ஆலோசனை நடத்திய பின்னர் கலை பீடத்துக்கான 1ம் வருடப் பரீட்சை இம்மாதம் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதென முடிவு செய்யப்பட்டது.

(மா)

## பயிற்சி வகுப்பு

[பண்டத்தரிப்பு]

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட சங்கானை மேற்கு சுகாதாரக் குழுவின் தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இன்று பணிகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். சுகாதார கல்விப் போதனாசிரியர் திரு.கா.வைத்தீஸ்வரன், மானிப்பாய் சுகாதார வைத்தியத்தாதி திருமதி கே.சண்முகராசா ஆகியோர் உட்பட பலர் இப் பயிற்சி வகுப்புகளில் கருத்துரை வழங்குவார்கள்.

## ரூபவாஹினி

மாலை

- 5-30 இது உங்கள்நாடு (தமிழ்)
- 5-35 சிறுவர் நிகழ்ச்சி
- 6-00 'மலரும் அரும்புகள்' அங்கம்-5
- 6-30 இது உங்கள் உடம்பு
- 6-55 செய்திகள் (தமிழ்)
- 7-15 சுகாதார நிகழ்ச்சி
- 7-45 சங்கீத நிகழ்ச்சி
- 8-15 செய்திகள் (சிங்களம்)
- 8-45 வாரமத்தித் திரைப் படம் (சிங்களம்)
- 9-30 செய்திகள் (ஆங்கிலம்)
- 9-50 திரைப்பட தொடர்ச்சி
- 10-50 உலகச் செய்திகள்
- 10-35 திரைப்பட தொடர்ச்சி
- 11-30 ஒலிபரப்பு முடிவு.

## யாருடையது?

கந்தர்மடத்தைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளை கனகரத்தினம் என்பவரின் அடையாள அட்டையை திரு அன்ரனி ஸ்ரான்லி என்பவரும், கொழும்பு சூவீதி திரு நாகலிங்கம் பானுகோபன் என்பவரின் அடையாள அட்டையை திரு என். பரமானந்தமும், யாழ் கடைச்சாமி ஒழுங்கையைச் சேர்ந்த திரு நாகேந்திரம் சிவானந்தன்என்பவரின் அடையாள அட்டையை திரு கே. தங்கராசாவும், புகைப்படத்துடன் கூடிய 2 திறப்புகளை திரு சி. முபாரக்கும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

அமெரிக்கா ✶ கனடா ✶ ஜேர்மனி
✶ பிரான்ஸ் ✶ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365
538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

## செ‌ன். பற்றிக்ஸ் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக் கிழமை காலை நடைபெறவுள்ளது.

யாழ் ஆயர் அதிவண வ. தியோகுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சிறில் என். லோறன்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.


**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-15
விஜயகுமார்- ஜெய்சித்திரா
நாகேஷ் - அசோகன்
**தாயில்லாக் குழந்தை**

**Shanthi** (JAFFNA)
Daily 10-30, 2-30 and 4-45
MOVING VIOLATION
(Color)
(Action Thrilling Suspense)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜ்ஸ்ரீ
**உத்தரவின்றி உள்ளே வா**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
அசோகன்
நாகேஷ் -முத்துராமன்
**நல்வரவு**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
Robert Shaw.
FORCE 10 FROM NAVARONE
(War Film)

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
**மனோகரா**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-15
முத்துராமன் - ஸ்ரீவித்யா
**காலங்களில் அவள் வசந்தம்**
(புதிய பிரதி)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30
சிவாஜி - சௌகார்ஜானகி
**பார்மகளேபார்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15,
4-15, 6-30
**Hijack Savoy**
(Action packed-Thrill)


# கைதடியில் இளைஞர் நடத்திய கசிப்பு எதிர்ப்பு ஊர்வலம்!

(சாவகச்சேரி)

கசிப்பு உற்பத்தியையும் விற்பனையையும் ஒழிக்கும் நோக்குடன் கைதடி இளைஞர்கள் ''கசிப்பு எதிர்ப்பு'' ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

சுமார் 300 பேர் கலந்து கொண்ட இவ்வூர்வலம் கைதடி கிழக்கிலிருந்து ஆரம்பித்து கைதடி சந்தி வழியாக கைதடி தெற்கு, மேற்கு, வடக்கு பகுதிகளைக் கடந்து நவபுரத்தில் முடிவுற்றது.

இவ் ஊர்வலத்தின் போது ''கசிப்பினை ஒழிப்போம்'' ''கசிப்பு குடிப்பதனால் குடும்பம் குலையுது'' ''ஈரலைக் கருக்காதே'' போன்ற சுலோக அட்டைகளுடன் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது சென்ற இளைஞர்களின் ஊர்வலம்நவபுரம் கிராமத்தை அடைந்த பொழுது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த ஒருவர் கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

இந்த கசிப்பு உற்பத்தியாளரிடம் சென்ற இளைஞர்கள் கசிப்பு உற்பத்தியை கைவிடுமாறு ஆலோசனை வழங்கிய தன் பேரில் தான் வடித்துக் கொண்டிருந்த கசிப்பினை நிலத்திலே ஊற்றினர். இறுதியில் நவபுரத்தில் பொதுக்கூட்டம் ஒன்றுடன் இந்த கசிப்பு எதிர்ப்பு ஊர்வலம் முடிவடைந்தது.

## திருமலை கலவர கொலைவழக்கு:
# ஐந்து எதிரிகளும் பிணையில் விடுதலை!

(திருகோணமலை)

சிறிமாவோபுர இரட்டைக் கொலை வழக்கில் எதிரிகளான ஐந்து பேரும் திருகோணமலை நீதவான் திரு. ஹேமால் சேனாரத்னாவால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வழக்கு விசாரணையின் இறுதிக்கட்டத்தில் எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி எம். எம். அப்போன்ஸோ விடுத்த விண்ணப்பம் ஒன்றைத்தொடர்ந்து நீதவான் எதிரிகளை தலா 750 ரூபா சரீரப்பிணையிலும் தனிநபர் பிணையிலும் விடுவித்தார்.

1983 ஜூன் வன்செயலில் கே. ஆழ்வாப்பிள்ளை, அவரது மகன் ரமணிகரன் ஆகியோரை வாளால் வெட்டிக் கொலை செய்ததாக பன்ரிஸ் சில்வா, அஜித், ஹேமந்த, கலபதி, சிறிசேன ஆகியோர் மீது திருமலை பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

## வவனியாவில் போஷாக்கு வாரம்

[வவனியா]

அக்டோபர் 29 முதல் நவம்பர் 2 வரை அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ள போஷாக்கு வாரத்தை வவனியா மாவட்டத்திலும் விரிவான முறையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வவனியா திட்டமிடல் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் கவிதை, கட்டுரை, சுவரொட்டிப் பேச்சுப் போட்டிகளும் கிராமோதய சபை ரீதியிலும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியிலும் கருத்தரங்குகளும் படக்காட்சிகளும் நடைபெறவுள்ளன

பாடசாலைப் பிள்ளைகளுக்குப் இலைக்கஞ்சி வழங்கவும் மரக்கன்றுகள் விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன முக்கிய அம்சமாக இவ்வாரத்தில் மரநாட்டு விழா நடைபெறவுள்ளது இறுதி நாளன்று கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும். இவற்றிற்கு வவனியா றெட்பானா நிறுவனம் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

## நிதிசேகரிக்க முயற்சி

[சுழிபுரம்]

சுழிபுரம் பகுதியில் நூற்றுக் கணக்கானவர்களிடம் காணப்படும் தொழு நோயை தடுக்கும் பணியில்ஈடுபட்டு தொண்டாற்றி வரும் சுழிபுரம் சுகாதார சபையினர். அக்டோபர் மாதத்தில் கொடிதினம் மூலம் நிதி சேகரிக்கவுள்ளனர்

இந் நிதிமூலமாக சுகாதாரக் கல்வி மருந்து வகைகளை பெற்றுக கொடுக்கவும். உலக இயக்கங்கள் தொடர்பு மூலமாக உதவிகள் பெறவும் வாய்ப்பு ஏற்படுத்தலாம் என்று சபையினர் நம்புகின்றனர்.

## உயிரிழந்தவர் குடும்பத்திற்கு உதவி

[புலோலி]

கடந்த ஏப்ரல்மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களினால் காணாமல் போன யாழ் ஐக்கிய வியாபாரச் சங்க ஊழியர் நவரத்தின ராசாவின் பிள்ளைகளின் கல்வி, உடை போன்றனவற்றிற்கான செலவுகளைஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா தேவாச்சிரமம் மேற்கொள்ள முன்வந்திருப்பதாக பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

## கோண்டாவில் மகா கணபதி உற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடந்து வருகிறது.

தினமும் காலை பதினொரு மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் மாலை நான்கு மணிக்கு மாலைப் பூஜையும் அதனை தொடர்ந்து வசந்த மண்டப

(8-ம் பக்கம் பார்க்க)

## 'குமாரு'க்கு இப்படியும்
# ஓர் அனுபவம்

(திருகோணமலை)

தமிழ்க்காங்கிரஸின்பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், தம்மை யார் என்று தெரியப்படுத்தியும் அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் சுமார் ஒன்றேகால் மணித்தியாலம் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டாராம்.

திருகோணமலை உயர் நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்கொன்றில் எதிரிசார்பில் ஆஜராக சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் அங்கு தமது மனைவியுடன் வந்திருந்தார்.

நேற்று அதிகாலை 6-30 மணியளவில் கோணஸ்வரரை குடும்பசமேதராக வழிபட்டு விட்டு காரில் கோட்டை வாசலை வந்துசேர்ந்ததும் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி சோதனையிட்டனர்.

அப்பொழுது திருமதி குமார் பொன்னம்பலத்திடம் அடையாளஅட்டை இருக்கவே அவரை விட்டு விட்டு திரு குமார் பொன்னம்பலத்திடம் அடையாள அட்டை கேட்டதாகவும் அவர் அடையாள அட்டை இல்லை என்று கூறியதும் இராணுவத்தினர் உயர் அதிகாரி முன்னிலையில் அவரைக் கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ உயர் அதிகாரியிடம் தம்மை அறிமுகப்படுத்தியபோதும் அவர் அடையாள அட்டையின் அவசியம் பற்றி வலியுறுத்திச் சொன்னாராம்.

திரு. குமார் பொன்னம்பலம் கூறிய காரணங்களை ஏற்க மறுத்தமேல்அதிகாரி பொலிஸ் அதிபர் முன்பாக கொண்டு செல்லுமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டதன் பேரில் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டதாகவும் அங்குள்ள பொலிஸ் அதிபர் அவரை விசாரணை செய்த பின்னர் விடுவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## கூட்டுறவு ஊழியர்களுக்கு அடையாள அட்டை

(புலோலி)

கட்டைவேலி- நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கியுள்ளது

இன்றைய நிலையில் ஊழியர்களுக்கான அடையாள அட்டைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்த தென்பதை கருத்திற் கொண்டு கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர் சபை சகல ஊழியர்களுக்கும் புகைப்படங்களுடன் கூடிய அடையாள அட்டைகளை வழங்க வேண்டுமெனத் தீர்மானித்து வழங்கியுள்ளது.

கட்டைவேலி- நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தைப் போன்று இப்பகுதியில் உள்ள ஏனைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஊழியர்களுக்கு அடையாளஅட்டைகளை வழங்க வேண்டுமென ஏனைய ப. நோ. கூ. சங்க ஊழியர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பாராட்டு

(கிளிநொச்சி)

விவசாய விரிவாக்க சேவையாளராக கிளிநொச்சியில் கடமையாற்றி வந்த திரு. எஸ். பத்மநாதன் விவசாயப் போதனாசிரியராக பதவி உயர்வு பெற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை முன்னிட்டு பிரிவுபசார வைபவமும் பாராட்டு விழாவும் உதவி விவசாயபணிப்பாளர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கலந்து கொண்டபலரும் திரு பத்மநாதனின் சிறந்த சேவையை பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.


## உடன் ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள புளோவர் (Blowers) கெல்ப்பர் (Helpers) பபுளர் (Bubblers) உடனடியாகத் தேவை.

அனுபவத்திற்கேற்ப நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
வேலை பழகுபவர்களும் தேவை.
உடன் நேரில் வரவும்.

**சேவி**
**கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி 1602

## யாழ்ப்பாணத்தில் ரெலிவிஷன் மாளிகை
# ★ பிலிப்ஸ் ரெலிவிஷன்

கலர் – கறுப்பு – வெள்ளை (சகல அளவுகளில்)
* எலெற், கோல்ஸ்ரார், சொனி, சன்யோ
ரெலிவிஷன்கள்
* அன்ரனா, பூஸ்டர், வயர்
மற்றும்
உப உறுப்புக்கள் சகலதும் பெறலாம்.
அன்ரனா அமைப்பதில் முன்னோடிகள்

# நியு சிற்றி றேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24055

வாங்கும் ரெலிவிஷன்களுக்கு அன்ரனா, வயர் பூஸ்டர் இனும் முந்துங்கள்.

# இயக்கத்தின் பெயரைக் கூறி ஒரு லட்சம் ரூபா கொள்ளை

[யாழ்ப்பாணம்]

இயக்கத்தின் பெயரைக் குறிப்பிட்டு, வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிமுனையில் ரொக்கப்பணம் உட்பட ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 100 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

புங்குடுதீவைச் சேர்ந்த திரு. பொ. சிவபாலன் என்பவருடைய வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இரு நபர்களே இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டனராம்.

வீட்டுக்காரர்கள் 83 ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தின் போது கொழும்பில் கடைகள் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அகதிகளாகத் தமது சொந்த ஊரான புங்குடுதீவுக்கு வந்து குடியமர்ந்தவர்களாம்.

''கொள்ளைச்சம்பவம் இடம்பெற்ற இரவு 9-30 மணியளவில், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீட்டுக்கேற்றைத் திறக்கும்படி கேட்டார்கள் அவர்களின் வற்புறுத்தலின்பேரில் கேற்றைத் திறந்தோம். பின்னர் வீட்டுக்குள் வந்து தாங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றுர்கள். சிறிது நேரத்தில் கைத்துப்பாக்கி எடுத்துச் சத்தம் போடாமல் ஒரு அறைக்குள் போகும்படி உத்தரவிட்டார்கள். அப்பொழுது வீட்டு எஜமானியை மாத்திரம் வரும்படி அழைத்து, ''உமது கணவரைத் துப்பாக்கியால் சுடுவோம். எங்கே நகைகள் இருக்கிறது சொல்லவேண்டும்'' என்று பயமுறுத்தினுர்கள். பின்னர் வீட்டுகுக்ள் சென்று 8,500 ரூபா ரொக்கப்பணத்தையும் தாலிக்கொடி உட்பட 35 பவுண் நகைகளையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள்.''

இவ்வாறு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளர் புகார் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## இப்படியும் நடக்கிறது

அது ஓர் சிற்றூர். நல்லவர்கள் வாழும் பகுதி. அந்தச் சிற்றூரிலுள்ள வீடொன்றில் எக்கச்சக்கமான 'புதையல்' இருப்பது எப்படியோ ஒரு மந்திரவாதிக்குத் தெரிந்து விட்டது.

வந்தார் மந்திரவாதி அந்த வீட்டுக்கு. ''ஓம்... கிரீம்... சூ மந்திரக்காளி......'' என்று ஒலிக்கத் தொடங்கினுர்! கற்பனை உலகில் நீச்சலடித்த அந்த வீட்டுக்காரர்களுக்கு மந்திரவாதியின் 'தீரச்' செயல்கள் புல்லரிக்க வைத்தன. மந்திரவாதி விடுக்கும் எந்த ஆணையையும் நிறைவேற்ற பேராவல் கொண்டிருந்தனர்.

''எல்லா ஆய்த்தங்களும் நடக்கின்றன. புதையல் உள்ள இடமும் எனது கண்ணுக்குத் தெரிகிறது. இப்பொழுது தேவைப்படுவது ஒரு சிறுவன் மட்டும்தான். அவ்வளவுதான்'' என்றுர் மந்திரவாதி.

விடுவார்களா வீட்டுக்காரர்கள்? எப்படியோ ஓர் அப்பாவிச் சிறுவனைத் தேடிக்கண்டுபிடித்து மந்திரவாதியிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

சிறுவனைப் பலி இடுவதற்கான ஆயத்தங்கள் நள்ளிரவு நேரத்தில் நடந்து கொண்டிருந்த அந்தப் பயங்கரமான நேரத்தில்...... எப்படியோ செய்தி அறிந்து இளைஞர் கோஷ்டி மின்னல் வேகத்தில் வீட்டுக்குள் நுழைந்து சிறுவனை மீட்டு வீட்டுக்காரர்களை ஒரு கை பார்த்ததாம்.

பிந்திய செய்தி: பலவந்தமாக சைக்கிளில் துடிக்கத் துடிக்க இளைஞர்களினுல் ஏற்றிச் செல்லப்பட்ட அந்த மந்திரவாதியைக் காணவில்லையாம்! நான் ஆரம்பத்கில் குறிப்பிட்ட சிற்றூர்; பண்டத்தரிப்பிலுள்ள சில்லாலை.

ஊடுருவி

## ஹாட்லிக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அமிர்தலிங்கம் பார்த்தபொழுது மேற்படி கல்லூரி அதிபர் திரு. சாமுவேல் நூல் நிலையம் சம்பந்தப்பட்ட தகவல்களை மிகுந்த மனவேதனையுடன் வெளியிட்டார்.

திரு அமிர்தலிங்கத்துடன், கூட்டணி நிர்வாகச்செயலாளர் திரு. ஆ மு. ஆலாலசுந்தரம், உறுப்பினர் திரு ந. இராஜேந்திரன், பருத்தித்துறை நகரசபை முன்னுள் தலைவர் திரு. எம். வேலும்மயிலும் ஆகியோரும் சென்றிருந்தனர்.

கல்லூரியில் எரிக்கப்பட்ட கட்டிடங்கள் திருத்தி அமைக்கப்படும்வரை வகுப்புகள் நடத்தவேறு வசதிகள் இல்லை என்றும், உடனடியாக வகுப்புகள் ஆரம்பிக்க முடியாதென்றும், திரு அமிர்தலிங்கத்திடம் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

பருத்தித்துறை நவீன சந்தையிலுள்ள முழுக்கடைகளும் முற்றுகத்தீக்கிரையாகி இருப்பதாகத் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து அவர்களிடம் உண்மை நிலையைக் கேட்டறிந்ததாகவும் கூறினுர்.

### நஷ்டஈடு

ஜனதிபதியை நேரில் சந்தித்து நிலமைகளை விளக்கிக் கூறி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்வதாகவும் அவர் சொன்னுர்.

### மகாத்மா காந்திசிலை

பருத்தித்துறை நவீனசந்தை வடமேற்கு மூலையிலுள்ள மகாத்மாகாந்தி சிலையின் தலை கூட உடைக்கப்பட்டுசரிந்தநிலையில் காணப்படுவதாகவும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மற்றும் கரணவாய் தெற்கு, அச்சுவேலி ஆகிய இடங்களில் எரிக்கப்பட்ட வீடுகளையும் திரு அமிர்தலிங்கம் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்து விபரங்களை அறிந்து கொண்டார். (மா)

## சூட்டுக் காயங்களுடன் சடலம்

[கோண்டாவில்]

யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு சடலம் காணப்பட்டது

யாழ் மேலதிக நீதவான் கே. பி.எஸ். வரதராசாவிற்கு, இது பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் சடலத்தை யாழ் அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று பிரேத சாலையில் வைக்கும்படி பணித்துள்ளார்.

சடலம் இன்னும் அடையளம் காணப்படவில்லை. பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இன்று பிரேத பரிசோதனை நடைபெறும். [க]

## வகுப்புகளை.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யும், அரசாங்க அதிபர் சந்தித்து, கல்லூரிக்கு ஏற்பட்ட சேதம் பற்றி விபரம் அறிந்துக் கொண்டார்.

பெற்றேர் பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பவிரும்பவில்லை என்றும், மாணவர்கள் வந்து போகக் கூடிய பாதுகாப்பான சூழ்நிலை இல்லை என்று பெற்ரேர் கருதுவதாகவும் அதிபர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை முதல் மாணவர்கள் கல்லூரிக்கு செல்லவில்லை என்றும். சுமார் 2500 மாணவர் இங்கு கற்று வருவதாகவும், அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கப்பட்டது.

ஹாட்லி கல்லூரி நூலகமும் அங்கிருந்த சுமார் 7500 நூல்களும் முற்ருக எரிந்து சாம்பலாகிவிட்டதாகவும், அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி சிற்றுண்டிச்சாலை 'பூரணம்பிள்ளை கட்டடம்' ஆகியவை முற்ருக எரிந்து விட்டதாகவும், 3 அறைகளும் தளபாடங்களும் முற்ருக எரிந்து விட்டதாகவும், மற்றும் 3 அறைகளின் கூரையும் எரிந்து விட்டதாகவும் தெரிவித்த அரசாங்க அதிபர் வகுப்புகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு கல்லூரியில் வசதியில்லை என்றும் தெரிவித்தார்.

வடமாநில கல்வி அதிபருடன் தொடர்பு கொண்டு, கல்லூரி கட்டடங்களை உடன் திருத்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

பருத்தித்துறை நகரில், காப்டன் மோகனதாஸ், ஜெயபொஸ், சிவகடாட்சம் ஆகிய மூவர் பலியானதாக அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கப்பட்டது. மூவர் காயமடைந்ததாகவும், காயமடைந்த மற்றும் பலர் தனியார் சிகிச்சை நிலையங்களுக்கு சென்றிருக்கலாம் என்றும், அப்பகுதியிலுள்ளவர்கள் அரசாங்க அதிபரிடம் தெரிவித்தனர். [க]

பயிலுர் செல்வன் ஜேக்கப் கிறிஸ்ரி[15 வயது] சைக்கிளில் பாடசாலைக்கு ந்துகொண்டிருந்தபோது கீரிமலை-மாவிட்புரம் வீதியில் தாக்கப்பட்டதாகவும் மேலும் சிலரும் தாக்கப்பட்டதாகவும், இதன் எதிரொலியாகக் காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தில்மணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இன்று ஆரம்பமாகும் பயிற்சி நெறி

(கோப்பாய்)

கோப்பாய் கல்வி மூலவள நிலையமும், யாழ். தேசிய கூட்டுறவுச் சபையும் இணைந்து, புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி வளவில் அமைந்த கோப்பாய் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ''விஞ்ஞானமுறையில் உடை தயாரித்தல்'' பயிற்சிநெறியை அங்குரார்ப்பணம் செய்து, தொடர்ந்து ஆறுமாதங்களுக்கு நடாத்துகின்றது. இன்றைய வைபவத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசாவும், யாழ் தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. எஸ். சிவமகாராஜாவும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்கின்றனர். இப்பயிற்சிநெறியில் 36 யுவதிகள் பங்குகொள்வதாகவும், பயிற்சி முடிவில் தேசிய கூட்டுறவுச் சபையில் சித்தியடைவோருக்குச்சான்றிதழும் வழங்கப்படுமெனக் கோப்பாய் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் தெரிவித்தார்.

## கோண்டாவில்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பூசையும் நடைபெற்று வருகிறது

எதிர்வரும் சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் தமிழ்நாடு கோவை ஆதீனத்தைச் சேர்ந்த சாஹித்திய சிரோன்மணி சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்கள் மகோற்சவக்குருக்களாககடமையாற்றி வருகிறுர்

## ரூ. 50,000.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தில் புகுந்த இளைஞர்கள் கோஷ்டி துப்பாக்கி முனையில் சுமார் 50,000 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இவ் இளைஞர்கள் மினிவானென்றில் வந்தே இக்கொள்ளையைநடாத்திச்சென்றதாகத் தெரியவருகிறது.

உடுப்பிட்டி உப அலுவலகத்திலும் கொள்ளை நடந்துள்ளது

## மாணவர் பகிஷ்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தே சில மாணவர்கள் ரோந்துப் படையினரால் தாக்கபட்டனர் என்றும் ஜீ சி ஈ சாதாரண வகுப்பில் கல்வி

## சதி முயற்சி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துக் கொண்டிருக்கின்றன.

''அரசாங்க அதிகாரியான டக்ளஸ் லியனகே வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது அரசாங்கத்தின் அனுமதியைப்பெறவேண்டும். இராஜாங்க அமைச்சு அவரின் பிரிட்டன், நைரோபி விஜயங்கள் மட்டும் உத்தியோகபூர்வமானவை என்று அறிவித்துள்ளது. ஆனுல் இஸ்ரேல் விஜயம் அவரது தனிப்பட்டதொன்று என்றும், அதுபற்றி அறிவிக்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளது இது பெரும் சந்தேகத்தை அரசியல் வட்டாரங்களில்கிளப்பி விட்டுள்ளது. அத்துடன் திரு. லியனகே ஜெரூசலத்தில் தெரிவித்த பாதகமான கருத்துக்கள்பற்றிய ஆதாரங்களும் போதுமானளவு உள்ளன. எனவே அவர் மீதான நடவடிக்கை மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

'திரு டக்ளஸ் லியனகே 1962-ம் ஆண்டில் சட்டபூர்வமாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமொன்றைக் கவிழ்க்கச் சதிசெய்தவர்களில் மிக முக்கியமானவராவார்.

'அச்சதி வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட அவர் பிரிட்டனில்' பிறிவிக்' கவுன்ஸிலில் சட்ட நுட்பமொன்றில் தோன்றிய தவறினுலேயே விடுதலையானுர். ஆனுல் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பல மறுக்கப்படமுடியாதவையாக இருந்தன. அப்படிப்பட்ட ஒரு சதிகாரரை எவ்வாறு இந்த அரசாங்கம் தகுதிவாய்ந்த அதிகாரியாகவும், இராஜாங்க அமைச்சின் செயலாளராகவும் நியமிக்க முடியும்?

'இஸ்ரேலில் திரு லியனகே அந்த நாட்டின் வெளிநாட்டமைச்சுப் பணிப்பாளருடன் பேசியுள்ளார். இலங்கையில் தமது அமைச்சுடன் சம்பந்தமில்லாத அமைச்சு ஒன்றைச் சேர்ந்தவருடன் எவ்வாறு அவர் அங்கு பொறுப்பற்ற முறையில் பேசமுடியும்?

ஜனதிபதி, பிரதமர், அமைச்சர்களாலேயே திரு. லியனகே தெரிவித்த கருத்துக்கள் ஒரு நாட்டில் தெரிவிக்கப்படக் கூடியவை ஆனுல் அவர் அரசாங்க அதிகாரியாக அக்கருத்துக்களை வெளியிட்டுள்ளமை மேற்குறிப்பிட்ட மூன்று தரத்தினரையும் அவமதிப்பதாக இருக்கிறது'' என்றுர்: (கி)

## முகாமில் 135 இளைஞர்கள்

(யாழ்ப்பாணம்)

காவிலிலுள்ள 'பூஸா' முகாமில் தற்பொழுது 135 இளைஞர்கள் மட்டுமே உள்ளனர்.

காலி முகாம் கேர்ணல் பெர்ணுன்டோ யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திற்கு இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

முகாமிற்கு 348 பேர் கொண்டு செல்லப்பட்டதாகவும். அவர்களில் 213 பேர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## அமிர் கொழும்பு திரும்புகிறுர்

(யாழ்ப்பாணம்)

தமிழர்விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று கொழும்பு செல்லவுள்ளார்

திரு. அமிர்தலிங்கம், ஜனதிபதியைச் சந்தித்து அண்மைக்காலங்களில் வடபகுதியில் ஏற்பட்டுள்ள சம்பவங்களை விளக்கிக்கூறுவார். (மா)

## நெல்லியடியில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதிக்கு இராணுவம் வரவே இளைஞர்கள் ஜீப்பைக் கைவிட்டு ஓடிவிட்டனர். கைவிடப்பட்ட ஜீப்பை இராணுவத்தினர் எடுத்துச்சென்றனர்.

அதையடுத்து துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்கவே பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

## டக்ளஸ் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் அதனுல் இலங்கை அரசு அவர் மீது விசாரணை நடத்த உத்தேசிததிருந்ததும் தெரிந்ததே

திரு. லியனகே சில தினங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பினுர். நேற்று அவர் ஜனதிபதி மாளிகைக்குச் சென்று ஜனதிபதியிடம் தமது ராஜினுமாக கடிதத்தை கையளித்தார் ராஜினுமாக்கடிதம் ஜனதிபதியினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.